# Lokalhistoriewiki.no இல் தமிழ் செயற்திட்டம்

## பின்னணி

உள்ளூர் வரலாறு வீக்கியில் தமிழ் வரலாறு மற்றும் பண்பாடு பற்றிய கட்டுரைகள் பல வேர்களைக் கொண்டுள்ளன. அவற்றில் ஒன்று 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்ட ஒரு கூட்டுச் செயற்திட்டமாகும். அது நோர்வேயில் உள்ள பல புலம்பெயர் தமிழ் சமூகப் பங்காளர்களிற்கும் தேசிய நூலகத்திற்கும் இடையேயான ஒரு கூட்டுச் செயற்திட்டமாகும். இத்திட்டத்தின் உந்து சக்தியாக ஒரு பணிக்குழு செயல்படுகிறது. *TRVS* இந்த செயற்திட்டத்திற்கான ஒரு அனுசரணையாளர் ஆகும். அதே நேரத்தில் நோர்வேயிய உள்ளூர் வரலாற்று நிறுவனம் (*Norsk Lokalhistorisk Institutt - NLI)* ஒரு வழிகாட்டிப் பாத்திரத்தை கொண்டுள்ளது. இக்கட்டுரைகளின் மற்றொரு வேர் உமாபாலன் சின்னதுரையின் நூல் திட்டம் ஆகும். அது 2016 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த நூலிலிருந்து வீக்கியில் வெளியிடப்பட்ட இருநூறுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை பயனர்கள் சுதந்திரமாகப் புதுப்பிக்க முடியும்.

*Lokalhistoriewiki.no* இல் உள்ள *«Et mangfold av historier – norsk-tamilenes historie»* (ஒரு பன்முகத்தன்மையான கதைகள் - நோர்வேயியத் தமிழர்களின் வரலாறு) எனும் செயற்திட்டமானது 20.09.2021 அன்று *«Snøfnuggpalmen-*பூம்பனிப்பனை» என்ற பெயரில் ஒரு இலச்சினையைப் பெற்றது.

*Lokalhistoriewiki.no* என்பது நோர்வேயின் தேசிய நூலகத்தில் உள்ள நோர்வேயிய உள்ளூர் வரலாற்று நிறுவனத்தால் (*NLI*) நிர்வகிக்கப்படும் ஒரு இணையதளம் ஆகும். இது நோர்வேயின் உள்ளூர் வரலாற்றை தன்னார்வப் பணி மூலம் எழுதுவதற்கான ஒரு இணையவழித் தளமாகும்.

*«Et mangfold av historier – norsk-tamilenes historie»* என்ற செயற்திட்டத்தின் மூலம், இந்தத் திட்டத்திற்கான பணிக்குழு நோர்வேயில் உள்ள தமிழ் அமைப்புகள் தமது உறுப்பினர்களை இந்த தன்னார்வப் பணியில் ஈடுபடுத்தவும் ஊக்குவிக்கவும் அழைக்கின்றது.

# சுய ஆவணப்படுத்தல்

## நீண்ட கால நோக்கத்திற்கான ஒத்துழைப்பு

இந்த செயற்திட்டத்தின் மூலம், நோர்வேயில் உள்ள புலம்பெயர்ந்த தமிழர்களின் சுய ஆவணப்படுத்தலுக்கான களத்தை இந்தப் பணிக்குழு உருவாக்கியுள்ளது. நோர்வேயில் உள்ள தமிழ்ச் சமூகம் மற்றும் நிர்வாக அதிகாரம் கொண்ட தமிழ் அமைப்புகள் பின்வரும் மூன்று செயற்பாடுகளை ஒழுங்கு செய்ய ஒத்துழைக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறது.

1. உங்கள் நிர்வாகக் குழுக்களுடனும் உறுப்பினர்களுடனும் வீக்கி செயற்திட்டம் பற்றிய தகவல் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்தல்
2. சமூக ஒன்றுகூடலுடனான வீக்கிப் பட்டறைகளை ஒழுங்கு செய்தல். அங்கு கட்டுரைகளை எழுதக் கூடிய எழுத்தாளர்களைச் சேர்த்தல். அவர்கள் நோர்வேயிய மொழியில் எழுதக்கூடிய இளைஞர்களாகவோ அல்லது பெரியவர்களாகவோ இருக்கலாம்.
3. உங்கள் நிறுவனத்த்தின் முயற்சிகள் அல்லது தனியார் முயற்சிகள் பற்றிய கட்டுரை(களை) எழுதுதல் அல்லது புதுப்பித்தல் பொறுப்பை ஏற்றல்

## சுய ஆவணப்படுத்தலுக்கான வீக்கி செயல்திட்டத்தின் முக்கியத்துவம்

புலம்பெயர்ந்த முதல் தலைமுறை தமிழர்கள், தமிழர்களின் புலம்பெயர் வரலாற்றில் ஒரு தொடக்கப்புள்ளி ஆவார்கள். "புலம்பெயர் தமிழர்" (Tamil Diaspora) என்று சர்வதேச அளவில் அறியப்பட்ட அடையாளத்திற்கு அவர்கள்தான் ஆதாரம். நோர்வே மற்றும் உலகெங்கிலும் உள்ள புலம்பெயர் தமிழர்களின் தகவல்கள், சான்றுகள், நினைவுகள், அடையாளம், பண்பாட்டுப் பாரம்பரியத்திற்கான தோற்றமும் அடித்தளமும் அவர்களின் வரலாறு ஆகும். புலம்பெயர்ந்த முதல் தலைமுறை தமிழர்களின் வரலாறு பல்வேறு நாடுகளில் வாழும் இரண்டாம், மூன்றாம் மற்றும் வருங்கால சந்ததியினரின் அடையாளத்திற்கான அடிப்படை ஆகும். "நாம் யார்" என்ற கேள்விக்கு அவர்களே ஒரு வாழும் சான்றாக உள்ளார்கள். புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளில் சமூக தொடர்பாடல்களின் ஆவணங்களின் பற்றாக்குறை, சுய ஆவணப்படுத்தலை இன்னும் அவசியமாக்கிறது. ஒரு வெற்றிகரமான சுய ஆவணப்படுத்தலின் விளைவும், சுய ஆவணப்படுத்தல் இல்லாததன் விளைவும் நீண்ட கால ஓட்டத்திலேயே புலப்படும். வருங்கால சந்ததியினர் தங்களின் வேர்கள் பற்றிய தகவல்களையும் ஆதாரங்களையும் தேடத் தொடங்கும் போது, சமகால ஆவணங்களின் பற்றாக்குறை அவர்கள் தங்களது அடையாளத்தை அறிய முடியாத நிலையை ஏற்படுத்தும்.

## சுய ஆவணப்படுத்தல் ஏன் முக்கியமானது?

- நோர்வேயில் தமிழர்களின் குடியேற்ற வரலாற்றின் தொடர்ச்சியைப் பிரதிபலிக்கும் ஆவணங்கள் இல்லாமை
- தமிழ் அமைப்புகளில் தமிழர்களின் சமூக தொடர்பாடல்கள் பற்றிய ஆவணங்கள் இல்லாமை
- தமிழ் அமைப்புகளில் ஆவணங்களின் அணுக்கம் கிடைக்காமை
- நோர்வேயில் தமிழர்களின் புலம்பெயர்ந்த வரலாற்றின் பிரதிநிதித்துவத்தைக் காட்டக்கூடிய நோர்வேயிய ஆவணக் காப்பகங்கள், நூலகங்களில் தமிழ் அமைப்புகளின் சுவடிகள் இல்லாமை
- தமிழ் அமைப்புகளில் சிதறடிக்கப்பட்ட ஆவணங்கள்

## வீக்கி செயல்திட்டம் பின்வரும் விடயங்களை சுய ஆவணப்படுத்தல் மூலம் ஊக்குவிக்கும்

நினைவுகள், அனுபவங்கள், நிகழ்வுகள், பயணங்கள், செயல்முறைகள், வளர்ச்சிகள், மாற்றங்கள், வேர்கள், பாரம்பரியம், வரலாறு, பண்பாடு, உள்ளூர் மற்றும் வரலாற்றுக் கதைகள்.

Du kan lese mer om prosjektet i tidsskriftet Notam (mai 2022): http://notam.eu/wp-content/uploads/2022/08/notam_22.pdf
og på DiasporA Tamil Archives: https://diasporatamil.no/snofnuggpalmen-lokalhistoriewiki-no/. Her er veiledning og konkrete forslag til artikler du kan skrive: https://lokalhistoriewiki.no/wiki/Tamilsk_historie_og_kultur/Brukerveiledning
https://lokalhistoriewiki.no/wiki/Malsamtale:M%C3%A5nedens_dugnad_2022-05

திருத்தப்பட்டது: 12.01.2023